# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/SC/7–13, 15–06–2009 நாளிட்டது )

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைக் குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI பிரிவு 2–ல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், நுகர்வோரால் காசோலை செலுத்துகை குறித்த ஒருசில இடர்ப்பாடுகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், நுகர்வோரால் காசோலை செலுத்துகை முறையை மீட்டிக்கொடுத்தல் பொறுத்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்களை பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது :–

## 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

a) இந்த விதித் தொகுப்பு, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்படும்.

b) இது, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

(a) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியில், (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், இரண்டாம் வாக்கியத்தில், ‘‘மின் பகிர்வு உரிமம்தாரர்’’ என்ற சொற்றொடருக்குப் பின்பு ‘‘அல்லது மேற்சொன்ன மின் பகிர்வு உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்டவாறு மின்னணுவியல் செலுத்துகை மூலம்’’ என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(b) (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், –

(i) முதல் வாக்கியத்தில், மின் பகிர்வு அலுவலகத்தின் இடம் அமைந்திருக்கிறவிடத்து, என்ற சொற்றொடருக்குப் பின்பு, ‘‘அல்லது மின் பகிர்வு உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்டவாறு மின்னணுவியல் செலுத்துகை மூலம்’’ என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ii) ஏழாம் வாக்கியத்தில் வரும் ‘‘இரண்டாம் சந்தர்ப்பத்திற்காக’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘நான்காம் சந்தர்ப்பம் வரை’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்